## "என் உயிரினும் மேலான"... பேச்சுப் போட்டி!

# அடுத்த தலைமுறையை நோக்கிய சித்தாந்தப் பயணம்!



திராவிட இயக்கத்தின் நீண்ட நெடிய பயணம் என்பது களப்போராட்டம் மட்டுமின்றி, பேச்சாகவும் எழுத்தாகவும் இருந்தே வலுப்பட்டு இருக்கிறது.

ஒரு சமூகத்தில் உணர்வு நிலைகளை தட்டி எழுப்புவதில் பேச்சுக்கு எப்போதும் தனித்த இடம் உண்டு. அத்தகைய ஆற்றலின் வழியேதான் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகிய மூன்று தலைவர்களும் இச்சமூகத்தின் ஆன்மாவோடு தொடர்ந்து உரையாற்றினார்கள்.

அப்படிப்பட்ட தலைவர்களது பேச்சாற்றல் வழிதான் இந்த இயக்கம் ஆட்சியைப் பிடித்து மக்கள் பணியாற்றியது. அப்பணிகளால் சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகளைச் சீர் செய்யும் பயணம் தொடங்கிற்று.

இன்று அத்தகைய தலைவர்களின் நீட்சியாகத் தளபதி தனது பணிகளால் இந்த மாநிலத்திற்கான தனித்த அடையாளமாக இந்தியாவுக்கே அறிமுகம் ஆகிக்கொண்டிருக்கிறார் என்றால் மிகையில்லை.

இன்றைக்கு இந்த இயக்கத்தின் சித்தாந்தங்களை, கொள்கைகளை இன்றைய தலைமுறைக்குக் கொண்டுசெல்வதன் அவசியம் கூடியிருக்கிறது.

வரலாற்றை அறிந்திடாத தலைமுறையிடம் திராவிட இயக்க வரலாற்றை, தலைவர்களை, கொள்கைகளைத் தேடிக் கண்டறியச் செய்வதும், அந்தச் சித்தாந்தங்களை அவர்களையே பேச வைப்பதும் என்பதும் மிகத் தேவையான பணி.

அத்தகைய தேவையை உணர்ந்தவராகவே இளைஞரணிச் செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்தப் பணியை முன்னெடுத்தார்கள்.

அவரது உதவியாளரிடமிருந்து எனக்கு வந்த தொலைபேசித் தகவல் "நாளை அன்பகம் வந்து விடுங்கள்" என்பதாக இருந்தது. அங்கு தலைவர் கலைஞரின் நூற்றாண்டை ஒட்டி 'என் உயிரினும் மேலான' என்கிற தலைப்பில் பேச்சுப் போட்டிகளுக்கான அறிவிப்பை இளைஞரணிச் செயலாளர் வெளியிட்டார்கள்.

கழகத்திற்கென நூறு பேச்சாளர்களைக் கண்டறியும் பணியைக் கழகத் தலைவர் பணித்திருப்பதையும் தெரிவித்தார். அதில் எங்களை நடுவர்களாகப் பணியாற்றும்படி பணித்தார்.

அறிவிக்கப்பட்ட பத்துத் தலைப்புகளின் கீழ் தமிழ்நாடு முழுக்க 17,000 இளைஞர்களை முன் பதிவு செய்யவைத்ததே எங்களை மிகுந்த பரவசத்திற்கு உள்ளாக்கிற்று என்றால் மிகையில்லை.

சனி ஞாயிறுகளில் மாவட்டம்தோறும் அந்தப் போட்டிகள் நடப்பதற்கான பணிகளை இளைஞர் அணி அமைப்பாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், அமைச்சர்கள் இணைந்து ஒருங்கிணைத்தார்கள். ஒவ்வொரு மாவட்டத்தி லும் மிகச் சிறப்பான பேச்சாற்றல் மிக்க இளம் தலைமுறையினர் நம்முடைய திராவிட இயக்கத் தலைவர்களைக் குறித்தும் சித்தாந்தத்தின் பார்வைகளையும் பேச்சாற்றலின் வழி எங்கள் முன் வைத்தார்கள். எந்த ஒரு நிகழ்விற்கும் நடுவராக இருப்பது நிச்சயமாக ஒரு மிகப்பெரிய சவால். அதிலும் இந்தப் போட்டி ஒவ்வொருவருடைய சித்தாந்தப் பார்வை, கருத்தை வெளிப்படுத்தும் தன்மை, திராவிட இயக்கம் சார்ந்த புரிதல் இவற்றையும் நாங்கள் மதிப்பீடு செய்து தேர்வு செய்ய வேண்டிய கட்டாயம் எங்களுக்கு உண்டாயிற்று. அந்தச் சவாலை நாங்கள் பெருமையாகவே எதிர்கொண்டோம்.

இத்தனை இளைஞர்களால் இயக்கத்தையும் தலைவர்களையும் சித்தாந்தங்களையும் தேடிக் கண்டறிய முடிந்திருக்கிறது. ஆர்வத்தோடு அவர்கள் வாசித்த தலைவர்களுடைய சித்தாந்தங்களை, பெருமைகளை இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதே எங்களைப் பெருமிதத்திற்கு உள்ளாக்கிற்று. அவர்களில் சிறப்பாகப் பேசியவர்களை நாங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 இலிருந்து 12 பேர்வரை தெரிவுசெய்தோம்.

கழகத்திற்குத் தேவை 100 பேச்சாளர்கள் என்பதே இளைஞரணிச் செயலாளருக்குத் தலைவரது அறிவுறுத்தல். "இளம் பேச்சாளர்கள், திராவிட இயக்கம் பற்றிப் பேசக்கூடிய பேச்சாளர்கள் 100 பேரைக் கண்டறியச் சொல்லியிருக்கிறார். ஆனால் நீங்கள் 100 என்பதை கணக்கில் வைத்துக் கொள்ள வேண்டாம். அதற்கு மேலாகவே சிறப்பாக பேசக்கூடியவர்களை கண்டடைந்தால் அவர்களையும் நீங்கள் தேர்வு செய்யலாம். அங்கு எந்த விதமான தயக்கமும் வேண்டாம்'' என்று இளைஞரணிச் செயலாளர் எங்களுக்கு அறிவுறுத்தி னார். ஏராளமான மாணவ மாணவிகள், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் ஆண்களுக்குச் சமமாக அல்ல, அதிகமாகவே பெண்களும் பங்கேற்பாளராக இருந்ததைக் கண்டு வியந்தோம்.

திராவிட இயக்கம் இங்கே செய்து காட்டியிருக்கும் அற்புதமான விஷயமாக இதை நாங்கள் பார்த்தோம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 12லிருந்து 15 பேர்வரை நாங்கள் தேர்வுசெய்தோம்.

ஒவ்வொரு இடத்திலும் மூன்று பேர் நடுவர்களாக இருந்தோம். அவர்கள் வாசிப்பினால் கண்டடைந்த கொள்கையும் வீசிக்காட்டிய வார்த்தைகளும் எங்களையும் இளைஞர்களையும் இணைத்த பாலமாக நின்றன. 20 ஆண்டுகளுக்கு முன் கழகம் நடத்திய இதே போன்றதொரு பேச்சுப்போட்டியில்தான் தமிழன் பிரசன்னா எனும் மாணவரை நாங்கள் தேர்ந்தெடுத்தோம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு மண்டல ரீதியாக ஒரு பயிற்சியை ஒருங்கிணைக்க வேண்டும் என்று நாங்கள் இளைஞரணிச் செயலாளர் அவர்களுக்குக் கோரிக்கை வைத்தோம்.

அதன்படி மாவட்டம் வாரியாகத் தேர்வு செய்யப்பட்ட பேச்சாளர்களை மண்டலங்களாகப் பிரித்து அந்த மண்டலங்களுக்கு நாங்கள் சென்று ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஆறு நடுவர்கள் அவர்களுக்கான பயிற்சியை வழங்கினோம்.

இளைஞர் அணி மிகச் சிறப்பான ஏற்பாடுகளை அறுசுவை உணவோடு, வந்திருக்கக்கூடிய பிள்ளைகளுக்கு சகல வசதிகளையும் செய்து அவர்களை அழைத்துவந்தார்கள். நாங்கள் அந்தப் பிள்ளைகளோடு தனித்தனியாக உரையாடலை நிகழ்த்தினோம். அவர்கள் எப்படிப் பேச வேண்டும், தடுமாறாமல் கருத்தை எப்படி முன்வைக்க வேண்டும் என்று விளக்கினோம்.

அவர்களுக்குத் தேவையான புத்தகங்கள் அல்லது தகவல்களைஅன்பகத்திலிருந்துபெற்றுக்கொள்ளலாம் என்று சொன்னோம். உங்களுக்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்கிற செய்தியோடு பயிற்சிகள் நடந்து முடிந்தன.

இப்பொழுது மண்டலம் வாரியாகத் தேர்வுசெய்யப்பட்டுத் தமிழ்நாடு முழுவதும் 182 பேர் அடையாளம் காணப்பட்டிருந்தார்கள். அவர்கள் சென்னையில் இரண்டு நாட்கள் தங்கி இருந்து அரையிறுதி, இறுதிப் போட்டிகளில் கலந்துகொள்ளப் பெற்றோரோடு வந்திருந்தார்கள்.

அவர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளையும் இளைஞர் அணியினர் செய்திருந்தார்கள். இறுதிப் போட்டியில் வென்ற மாணவ - மாணவிகளுக்கு அறிவாலயத்தில் முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய கைகளால் பரிசளித்து வாழ்த்துகளை யும் பாராட்டுகளையும் தெரிவித்தார்கள்.

இறுதிப் போட்டியில் மிகச் சிறப்பாக பேசிய அவர்களுக்கு கழகத் தலைவரின் சிபாரிசும் இணைந்துகொள்ள, மூன்று லட்சம், இரண்டு லட்சம், ஒரு லட்சம் என்று பரிசுகள் உயர்த்தி வழங்கப்பட்டன.

வெற்றி பெற்ற மாணவர்கள் மூன்று பேரும் மேடையில் தலைவர் முன்பாக மிகச் சிறப்பாகப் பேசி எங்களைப் பிரமிப்புக்கு உள்ளாக்கினார்கள். தலைவர் உட்பட ஒட்டுமொத்த அறிவாலயமுமே உணர்வு நிலைக்குட்பட்டிருந்தது, இளைஞரணிச் செயலாளரது முகத்தில் வழிந்த பெருமிதத்திற்கு ஈடேதுமில்லை.

இந்தப் பேச்சுப் போட்டியில் தேர்வுசெய்யப்பட்ட இளைஞர்களை மாநிலம் முழுவதும் கழகத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளில் பேச்சாளராக அழைத்து வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்கிற அன்பான கட்டளையை யும் முதல்வர் அவர்கள் இளைஞரணிச் செயலாளரிடம் முன்வைத்தார்கள் .

அதை உடனடியாக இளைஞரணிச் செயலாளர் ஏற்றுக்கொண்டார்.

இந்தப் போட்டிகளில் போட்டிகளுக்கு நடுவராகப் பணியாற்றக் கிடைத்த வாய்ப்பு வாய்ப்பு வாழ்நாள் முழுக்க மறக்கவியலாத மிகப்பெரிய வாய்ப்பாக எனக்குள் இருக்கும். அந்தப் போட்டியின் வழியாக இன்றைக்கு நிகழ்ந்திருக்கக்கூடிய தாக்கம் மிக முக்கியமானது. இளைஞரணி எதை முன்னோக்கிப் பயணத்தைத் தொடங்கியதோ அந்தப் பயணத்தின் முதல் படியில் மிகவும் தேவையான செய்தி மிகச் சிறப்பாக இளைய தலைமுறையிடம் போய் சேர்ந்திருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

**கவிஞர்**
**சல்மா**
கழக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர்



இந்த திராவிட இயக்கம், அதன் ஆட்சி, தலைவர்கள், கொள்கை, சித்தாந்தம், இவற்றை அடுத்த தலைமுறைக்குக் கொண்டுசெல்வது என்பது மிகப்பெரிய தேவை.

இந்தப் பயணம் அதை நோக்கியதாகச் சென்று கொண்டிருக்கிறது. அடுத்த தலைமுறையை திசை மாற்றிச் செலுத்தக்கூடிய பல்வேறு இயக்கங்கள் இன்றைக்கு முளைத்துக்கொண்டிருக்கும் நேரத்தில், இந்த இயக்கத்தின் பணிகள் கடந்த காலங்களில் எப்படி இருந்திருக்கின்றன. தற்போது எப்படி இருந்து கொண்டிருக்கிறது, எதிர்காலத்திற்கும் இந்த இயக்கத்தின் தேவை எந்த அளவிற்கு உள்ளது ஆகியவற்றை இந்தத் தலைமுறையினரிடம் இளைஞரணி கொண்டு சேர்த்திருக்கிறது.

இளைஞரணியின் நம்பிக்கை பொய்த்துப்போகாதபடி அதன் நோக்கம் சிறப்பாக நிறைவேறியிருக்கிறது என்பதை நேரடியாகப் பார்க்கக்கூடிய ஒரு அரிய வாய்ப்பை எங்களது இளைஞரணிச் செயலாளர் துணை முதல்வர் அவர்கள் எங்களுக்கு வழங்கினார் என்பதை மிகப் பெருமையோடு நன்றியோடு இந்தச் சந்தர்ப்பத்தில் நான் நினைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த இயக்கம் அடுத்த தலைமுறைப் பயணத்திற்கான சீரிய பணியை இளைஞரணிச் செயலாளர் வழியில் துவக்கியிருக்கிறது. அவர் காட்டும் திசையில் சூரியன் பிரகாசிக்கட்டும். கொள்கை பரவட்டும். தமிழர் தம் வாழ்வு சிறக்கட்டும்.

---

### தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு பட்டாசு மற்றும் 'கூட்டுறவுக் கொண்டாட்டம்'

# சிறப்புத் தொகுப்பின் மூலம் - ரூ.20.47 கோடி விற்பனை!

## கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!



சென்னை, நவ. 9-

கூட்டுறவுத்துறையின் மூலம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நடைபெற்ற பட்டாசு மற்றும் "கூட்டுறவுக் கொண்டாட்டம்" என்ற தீபாவளி சிறப்புத் தொகுப்பின் மூலம் ரூ.20.47 கோடி விற்பனை செய்யப்பட்டுள்ளது - என கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று (08.11.2024) வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

பண்டிகைகள் என்பது தமிழர்களுடைய வாழ்வியலோடு ஒன்றிய ஒன்றாகும். அத்தகைய பண்டிகைகளை ஏழை, எளிய, நடுத்தர மக்கள் என அனைத்துத் தரப்பு மக்களும் சிறப்பாக கொண்டாடி மகிழ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் பண்டிகை காலங்களில் பொதுமக்களுக்கு போதிய பாதுகாப்பு, போக்குவரத்து வசதி என பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி, கூட்டுறவுத்துறையின் மூலம் 31.10.2024 அன்று நடைபெற்ற தீபாவளி பண்டிகையை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சிறப்பாக கொண்டாடும் வகையில் பட்டாசு விற்பனை மற்றும் "கூட்டுறவு கொண்டாட்டம்" என்ற தீபாவளி சிறப்புத் தொகுப்பு விற்பனை ஆகியவை நடைபெற்றது.

தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில், தரமான பட்டாசுகளை உற்பத்தி நிறுவனங்களிலிருந்து நேரடியாக கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு குறைந்த விலையில் பட்டாசுகள் பொதுமக்களுக்கு கிடைக்கும் வகையில் 107 கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் 166 பட்டாசு விற்பனை மையங்கள் அமைக்கப்பட்டு ரூ.20.01கோடி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும், கூட்டுறவுத் துறையின் மூலம் நடத்தப்பட்டு வரும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், பிரதம பண்டகசாலைகள் நடத்தும் 65 சுயசேவைப்பிரிவுகள் மற்றும் 54 பல்பொருள் அங்காடிகளில் "கூட்டுறவு கொண்டாட்டம்" என்ற பெயரில் மளிகைப்பொருட்கள் அடங்கிய தீபாவளி சிறப்புத் தொகுப்பு விற்பனை 28.10.2024 முதல் நடைபெற்றது.

இதில், பிரீமியம் (Premium) மற்றும் எலைட் (Elite) என இரண்டு வகையாக மளிகைப்பொருட்கள் அடங்கிய தொகுப்பும், இனிப்புகள் செய்வதற்கு தேவையான பொருட்கள் அடங்கிய "அதிரசம்முறுக்கு காம்போ" என்ற விற்பனை தொகுப்பும் குறைந்த விலையில் ரூ.46 லட்சம் மதிப்பிலான 20,000 தீபாவளி சிறப்புத் தொகுப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் கூட்டுறவுத் துறையின் மூலம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நடைபெற்ற பட்டாசு மற்றும் "கூட்டுறவு கொண்டாட்டம்" என்ற தீபாவளி சிறப்புத் தொகுப்பின் மூலம் ரூ.20.47 கோடி விற்பனை செய்யப்பட்டுள்ளது என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

மேலும், இவ்விற்பனையை ஏற்பாடு செய்த அலுவலர்களுக்கும், சிறப்பாக விற்பனை மேற்கொண்ட விற்பனையாளர்கள் மற்றும் அனைத்து கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்கள். இதே போல, வரும் பொங்கல் திருநாளிலும் இது போன்ற சிறப்பு விற்பனையை பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சீரிய முறையில் ஏற்பாடு செய்திடவும், சிறப்பாக மேற்கொள்ளவும் கூட்டுறவுத்துறை அலுவலர்களுக்கு அறிவுரைகளையும் அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் வழங்கியுள்ளார்கள்.

---

### மருத்துவத் துறைச் சாதனைகளைப் பாராட்டி ஐ.நா சபை விருது தந்திருக்கிறது!

# 10 ஆண்டுகள் சாதிக்க முடியாததை 3 ஆண்டுகளில் சாதித்து இருக்கிறோம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில்!



**சென்னை, நவ. 9-**

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (07.11.2024) சென்னை, அரசு இராஜீவ்காந்தி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 திட்டத்தின்கீழ் சிகிச்சை பெறும் 3 இலட்சமாவது பயனாளியை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.**

**பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:**

நேற்று எதிர்க்கட்சித் தலைவர் டெங்குவினால் ஒரு சிறுமியின் இறப்பு குறித்து அறிக்கையில் வாயிலாக சொல்லும்போது, மருத்துவத்துறை 41 மாத காலமாக சீரழிந்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார், அவர் அறிக்கை விடும்போதெல்லாம் தொடர்ந்து அவருக்கு பதில் சொல்லி வருகிறேன். மருந்து இல்லை என்றால் எந்த மருத்துவமனையில் இல்லை என்று கேட்டோம், சேலம் என்றார், சொன்ன உடனேயே சேலத்திற்கு சென்று எந்த மருந்து இல்லை என்றாரோ அந்த மருந்து இருப்பை காண்பித்தோம்.

இந்த அரசுப் பொறுப் பேற்றபிறகு இதுவரை இல்லாத வகையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்களில் பாம்புக் கடி, நாய்க்கடிகளுக்கு மருந்து ASV, ARV என்று சொல்லக்கூடிய மருந்துகள் முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்பேரில் வைக்கப்பட்டு பெரிய அளவில் பயன்பாட்டில் இருந்து வருகிறது. Loading Doses என்று சொல்லக்கூடிய T.ASPIRIN, T.CLOPITAB, T.ATORVASTATIN என்னும் 3 மாத்திரைகள் மாரடைப்பு நோய்களுக்கு தொடக்க நிலையாக இருக்கும் அந்த மாத்திரைகளைப் பொறுத்தவரை 8713 துணை சுகாதார நிலையங்களிலும், 2286 ஆரம்ப சுகாதார நிலையங்கள் என ஒட்டுமொத்தமாக 10,999 மருத்துவமனைகளில் இருப்பு வைக்கப்பட் டிருக்கிறது.

நான் அவரிடம் ஏற்கெனவே சொன்னது தான் நீங்களோ அல்லது உங்கள் சார்புடையவரோ தமிழ்நாட்டில் உள்ள எந்த மருத்துவமனைக்கும் சென்று ஆய்வு செய்துக் கொள்ளவும், உயிர்காக்கும் மருந்துகள் எந்தெந்த மருத்துவமனைகளில் உள்ளது என்று தெரிந்து கொள்ளவும், எந்தவகையிலும் நாங்கள் உங்களுக்கு இடையூராக இருக்க மாட்டோம். அவர் இதுவரை அதற்கு பதில் சொல்லவில்லை, அவர்கள் நேரிடையாக சென்று பார்த்து உண்மைத் தன்மையினை உறுதி செய்யவில்லை, உண்மைத் தன்மை தெரிந்து கொள்வது அவர்களது நோக்கமல்ல, இந்த துறையின் மீது புழுதி வாரித் தூற்றுவது, இந்த துறையின் நோக்கங்களை கெடுப்பது, காரணம் 545 விருதுகள் இந்த துறை பெற்றிருக்கிறது, ஐ.நா சபையே விருது தந்திருக்கிறது, இப்படி பல்வேறு விருதுகளை பெற்று வரும் இந்த துறைக்கு கலங்கம் ஏற்படுத்த தொடர்ந்து அவர் செய்யும் முயற்சி, டெங்கு இறப்பு பொறுத்த வரை 8 ஆக பதிவாகி இருக்கிறது, 11 மாதம் ஆகின்றது, இன்னும் வடகிழக்கு பருவமழை 20 நாட்களுக்குள் தொடங்கும் என்று கருதுகிறோம், கடந்த 10 வருடங்களில் இந்த ஆண்டு மட்டுமே குறைவான டெங்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எப்போதும் ஒவ்வொரு ஆண்டும் 15, 20 என்கின்ற எண்ணிக்கையில் தான் டெங்கு பாதிப்பு இருக்கும், குறிப்பாக அதிமுக ஆட்சிக்காலத்தில் 2012 ஆம் ஆண்டு டெங்கு இறப்பு 66, 2017 ஆம் ஆண்டு டெங்கு இறப்பு 65, இந்த ஆண்டுதான் 8 என்கின்ற அளவில் இருக்கின்றது. டெங்கு மிகச் சிறப்பாக கட்டுப்படுத்தப்பட்ட ஆண்டாக இந்த ஆண்டு இருந்துக் கொண்டிருக்கிறது. இதுகூட தெரிந்துக் கொள்ளாமல் எதிர்க்கட்சித் தலைவர் அறிக்கை விடுவது ஏற்புடையது தானா என்று தெரியவில்லை.

இந்த பதிவின் வாயிலாக எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் கேட்டுக் கொள்வது, இந்த துறை மீது விவாதம் செய்ய நான் தயாராக இருக்கிறேன், நேரம் கொடுங்கள், இடம் சொல்லுங்கள், நான் ஒருவனே வருகிறேன், அலுவலர்கள் கூட யாரும் தேவையில்லை, உங்கள் முன்னாள் அமைச்சரை கூட அழைத்து வாருங்கள், எத்தனை பேரை வேண்டுமானாலும் அழைத்து வாருங்கள் விவாதம் செய்ய தயாராக இருக்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

---

# திருவாடனை சட்டமன்றத் தொகுதி பாக முகவர்கள் - பூத் கமிட்டி கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம். எம்.எல்.ஏ, அறிவிப்பு!



இராமநாதபுரம்,நவ. 9-

இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட திருவாடனை தொகுதி பார்வையாளர் மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் அருண், கலந்து கொள்ளும் பாக முகவர்கள் (BLA2) பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) கூட்டம், இன்று 09.11.2024 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் ஆர்.எஸ்.மங்களம் குட்லு மஹாலில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் திருவாடனை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள். நிர்வாகிகள், கிளைக்கழக, வார்டு கழக செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA2) பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) அனைவரும் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தேனி தெற்கு மாவட்டம் கம்பத்தில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் ஒன்றிய செயலாளர்கள், நகர செயலாளர்கள் பேரூர் கழகச் செயலாளர்கள்ஆலோசனைக் கூட்டம் தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு கம்பம் தொகுதி பார்வையாளர் ஜெயன் ஆண்டிபட்டி தொகுதி பார்வையாளர் முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையில் இளைஞர் அணி சார்பில் சமூக வலைதள பயிற்சி முகாம் நடத்துவது குறித்தும் வாக்காளர்கள் சேர்த்தல், நீக்கல், குறித்தும் ஆலோசனை க் கூட்டம் நடைபெற்றது. உடன் மகராஜன் எம்.எல்.ஏ. ஒன்றிய செயலாளர்கள் நகரச் செயலாளர்கள் பேரூர் செயலாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.